பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 04 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாதுகாப்புத்துறை சார்ந்த கல்விக்கு சிறந்த உலகளாவிய மையமாக தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் முன்னேறிக் கொண்டிருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மேற்காசிய நிலவரம் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் ஆலோசனை நடத்தினார்.

3. சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக கூட்டணிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்று திமுக இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மதுரை விமான நிலைய விரிவாக்க திட்டத்திற்கு நிலம் ஒதுக்காமல் திமுக அரசு முடக்கி வைத்திருப்பதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி 32 ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பாதுகாப்புத்துறை சார்ந்த கல்விக்கு மிகச்சிறந்த உலகளாவிய மையமாக தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் முன்னேறிக் கொண்டிருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

காந்திநகரில் உள்ள இந்த பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் நேற்று அவர் பங்கேற்றுப் பேசினார்.

உலக அளவில் மாறிவரும் பாதுகாப்பு சூழலில் இதுபோன்ற பல்கலைக்கழகம் கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவத்தையும், பொறுப்புகளையும் அதிகரிக்கச் செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பட்டம் பெறக்கூடிய மாணவர்கள் பாதுகாப்புத் துறையில் இந்தியாவை தற்சார்புடைய நாடாக கட்டமைப்பதில் தங்களின் பங்களிப்பை வழங்குவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாட்டின் வலிமையானது பாதுகாப்பு படையினரின் துணிச்சல் மற்றும் வீரத்தை மட்டும் சார்ந்திருக்காமல் தொழில்நுட்ப ரீதியான தற்சார்பையும் சார்ந்துள்ளதாக திருமதி திரௌபதி முர்மு குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், மேற்காசியாவின் தற்போதைய நிலவரம் குறித்து தாங்கள் விவாதித்ததாகவும், ஹோர்முஸ் நீரிணை திறந்திருப்பதுடன், பாதுகாப்பான கப்பல் பயணத்தை வலியுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

தமது இந்த உரையாடலின்போது இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் பிரதமர் அதில் கூறியுள்ளார்.

அனைத்து துறைகளிலும் உலகளாவிய ஒருங்கிணைந்த பங்களிப்பை இருதரப்பும் மேலும் வலுப்படுத்துவதற்கும் உறுதி ஏற்கப்பட்டதாக திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் ஒருவார காலமே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய அக்கட்சியின் இளைஞர் அணி செயலாளர், இந்தத் தேர்தலில் அஇஅதிமுக கூட்டணிக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளில் நெல்லை மாவட்டத்திற்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளிட்ட திமுக அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.

மதுரையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, மதுரை விமான நிலைய விரிவாக்க திட்டத்திற்கு நிலம் ஒதுக்காமல் திமுக அரசு, திட்டத்தை முடக்கி வைத்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை மாநகராட்சியில் வரி வசூலில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து அஇஅதிமுக அரசு அமைந்ததும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக வரும் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

அன்றைய தினம் மேங்குவங்க மாநிலத்தில் 152 தொகுதிகளில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும்.

இம்மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக வரும் 29ஆம் தேதி 142 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

ஏற்கனவே சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்த கேரளம், அசாம், புதுச்சேரியில் பதிவான வாக்குகளுடன் தமிழகம், மேற்குவங்க மாநிலங்களின் வாக்குகளும் அடுத்த மாதம் 4ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது அரியலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - **108** செகண்ட்ஸ்)

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

மேற்காசியாவில் பதற்றத்தைக் குறைக்கும் முயற்சியாக ஈரான் உடனான அடுத்தகட்ட பேச்சுவார்த்தை ஓரிரு நாளில் தொடங்கும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

-------------

அதிக சரக்குகளை ஏற்றி செல்லும் வாகனங்கள் மீது அபராதம் விதிக்க வழிவகை செய்யும் தேசிய நெடுஞ்சாலை திருத்தச் சட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது.

-------------

சத்தீஸ்கட் மாநிலம் சக்தி மாவட்டத்தில் தனியார் எரிசக்தி ஆலையில் நேற்று பாய்லர் வெடித்து ஏற்பட்ட விபத்தில் **13** தொழிலாளர்கள் உயிரிழந்தனர். **21** பேர் காயமடைந்தனர்.

-------------

வேலூர் மாவட்டத்தில் கூடுதல் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முன்னிலையில்

பொறியாளர்கள் மூலம் சரிபார்க்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி சிவசௌந்தரவல்லி ஆய்வு செய்தார்.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாரத்தான் போட்டி நடைபெற்றது.

------------- சுரேஷ்

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி **32** ரன் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வீழ்த்தி இரண்டாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு **192** ரன் எடுத்தது.

**193** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய கொல்கத்தா அணி **7** விக்கெட் இழப்புக்கு **160** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.**

**இப்போட்டி பெங்களூருவில் இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**